**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு**

## சபரகமுவ மாகாண சபை

# அறிவித்தல்

## சபரகமுவ மாகாண அரச சேவையில் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் ஆலோசகர் (கைத்தொழில்) ஜுகி IIIம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை – 2024

சபரகமுவ மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் அல்லாத வகுதி 2 சேவைத் தொகுதி (MN 1-2016) ஆலோசகர் (கைத்தொழில்) ஜுகி IIIம் தரத்தின் பதவிக்கு சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டி பரீட்சைக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வெற்றிட எண்ணிக்கை 01

02. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி: 2024.08.30

03. சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள்

(அ) கல்வித் தகைமைகள்

i. தாய்மொழி (சிங்களம்/ தமிழ்/ஆங்கிலமொழி) கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்க திறமைச் சித்தியுடன் ஒரே முறையில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

ii. கல்விப் பொது தராதரப் பத்திரம் (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்திலாவது (01) (சாதாரண ொபதுப் பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்

(ஆ) தொழில்சார் தகைமைகள்

i. ஜுகி தையல் துறையுடன் சம்பந்தப்பட்ட தேசிய தொழிற்சார் தகைமை (NVQ-4) திறன் பெற்றிருத்தல்

ii. கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்/ அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தொழிலுடன் சம்பந்தப்பட்ட இரு வருட பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல் (முதலாம் தகுதிகாண் தடைக்கு முன்னர் NVQ -4 திறன் பெற்றிருத்தல் வேண்டும்)

04. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது 18 இற்கு குறையாத மற்றும் 30 வயதிற்க மேற்படாது இருத்தல் வேண்டும்.

05. பதவிக்கு உரித்தான சம்பள அளவு:

இல. 03/2016 மற்றும் 2016.02.25ம் திகதிய அரச நிர்வாக சுற்று நிருபத்தின் பிரகாரம் ஆலோசகர் (கைத்தொழில்) ஜுகீ தையல் IIIம் தரத்திற்கு குறித்த சம்பள வகுதி MNI-2016 ஆவதுடன் குறித்த மாதாந்த சம்பள அளவு ரூ. 27,140 - 10x300 - 11x350 - 10x495 - 10x660 - ரூ. 45,540/- ஆகும்

06. எழுத்து மூல மற்றும் தொழில்சார் பரீட்சையின் பெறுமதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் எழுத்து மூல பரீட்சையில் சித்தியடைந்தோர் மாத்திரம் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப் படுவதுடன் எழுத்து மூல மற்றும் தொழில்சார் பரீட்சைகள் இரண்டிலும் சித்தியடைந்தோரிடம் பெற்றுக் கொள்ளப்படும் முழுப் புள்ளி சேர்க்கையில் கூடிய புள்ளிகள் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் திறமையின் ஒழுங்கில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கையின் பிரகாரம் சேர்த்துக் கொள்ளப்படுவர். அரச நிர்வாக சுற்று நிருபம் 15/90 இல் குறிப்பிடப்படும் விதிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கையெடுக்கப்படும்.

07. இவ் ஆட்சேர்ப்புடன் சம்பந்தப்பட்ட முழுமையான அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்படிவம் www.sg.gov.lk இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**தினீஷா எஸ். ரத்நாயக்க,**
**செயலாளர்,**
**சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு**
**கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு**
**சபரகமுவ மாகாண சபை.**
2024.07.11